www.tamilarangam.net

தமிழீழ மக்கள் விடுதலை இயக்கம்.
பேர்கன் கிளை.

# புதிய பாதை

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் அதிகார பூர்வ ஏடு

காதம் 3 | சனவரி-பிப்ரவரி 1985 | அன்பளிப்பு 2-00 | சுவடு 25

## ஆயுதம் வழங்கும் அரசு


தமிழீழத்தில் எல்லைப் பிரதேசங்களில் வாழும் சிங்கள மக்களுக்கு ஆயுதங்கள் வழங்குவதற்கு அரசாங்கம் எடுத்த நடவடிக்கை நாகரீக உலகத்தையே நாணித் தலை குனியச் செய்யும் ஒன்றாகும். இந்த ஆயுத விநியோகம் தமிழர்களுக்கு எதிராகவே பாவிக்கப்படும் என்பது வெளிப்படையானதே.

சுதந்திர இலங்கைக்கு முன்பிருந்தே தமிழ்ப் பிரதேசங்களில் சிங்கள குடியேற்றங்களை உருவாக்குவதில் அன்றைய இனவாதிகள் முன் நின்றார்கள். சுதந்திரத்தின் பின் தமிழீழத்தின் மூலை முடுக்கெல்லாம் சிங்களவர்களை குடியேற்றுவதன் மூலம் தமிழ் மக்களின் நிலங்கள் பறிக்கப்பட்டன. இதன் பின்பு தமிழ்ப் பிரதேசங்கள் புறக்கணிக்கப்பட்டு சிங்கள குடியேற்றங்களுக்கு சலுகைகள் பலவழங்கப்பட்டு ஊக்கமளிக்கப்பட்டன. அரசியல் வாதிகளும், அரசாங்க உத்தியோகஸ்தர்களும், காவல் படையினரும் சிங்கள குடியேற்ற வாசிகளை தமிழ் மக்களுக்கு எதிராக திசை திருப்புவதில் ஒத்துழைப்பு வழங்கினார்கள். காலவோட்டத்தில் இச்சிங்களக் குடியேற்றங்களில் உள்ள சில காடையரின் அட்டகாசத்தால் அருகில் இருந்த தமிழ்க் கிராமங்கள் வெளியேற வேண்டியதாயிற்று. 1977 இனக் கலவரத்தை தொடர்ந்து மேலும் மோசமாக பாதிப்படைந்தனர். இத

(12-ம் பக்கம் பார்க்க)

## தோழர் சுந்தரம் நினைவாக.....

1982 சனவரி 2ம் திகதி தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் படைத்துறைச் செயலரும் ''புதிய பாதை''யின் ஆசிரியருமான தோழர் சுந்தரம் அவர்கள் யாழ்ப்பாணம் சித்திரா அச்சகத்தில் வைத்து எதிர்ப் புரட்சிகர சக்திகளினால் கொலை செய்யப்பட்டார்.



தோழா! உன் கரங்களிலிருந்து வீழ்த்தப்பட்ட எழுதுகோலையும், துப்பாக்கியையும் ஏந்தி தோழர்கள் ஆயிரம் ஆயிரமாக அணிவகுத்து விட்டனர்.

தீமையை சுட்டெரித்து புரட்சிக்கு வழிகாட்டும் எமது எழுத்துக்களிலும், எதிரியை புறமுதுகிட்டு ஓடச் செய்யும் வேட்டுக்களிலும் இன்று நீ வாழ்ந்துகொண்டே இருக்கிறாய், எம்மை வழிநடத்துகிறாய்.

**''நீ வழங்கும் மரணதண்டனை கொலைகளே''**

**—டால்ஸ்டாய்**

(புதிய பாதையில் தோழர் சுந்தரம் அன்று வெளியிட்டதை தேவை கருதி இன்று நினைவூட்டுகிறோம்.)

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எமது நோக்கு

''சிறுபிள்ளை வேளாண்மை வீடுவந்து சேராது'' இது ஒரு பழமொழி.

நிலவுடமைக் கருத்துக்கள் ஓங்கி நிற்கும் எமது தமிழ் சமுதாயத்தில் புதிய தலைமுறைகளின் எழுச்சியை கொச்சைப் படுத்தும் முகமாக இது போன்ற பழமொழிகள் அடிக்கடி வழங்கப்பட்டு வந்ததுண்டு.

''தம்பிமார் படிக்கவேண்டும்'' என்ற புகழ்பெற்ற சுலோகமும் இதன் அடிப்படையில் அமைந்ததே.

விடுதலை இயக்கங்கள் தமது ஆரம்ப நாட்களில் இது போன்ற பல கருத்தியல் தடைகளை மீறி வளர்ந்தாக வேண்டியிருந்தது. முதலாளித்துவ தலைமைகள் எமது விடுதலைப் போராட்டத்திற்கு தலைமை கொடுக்க முடியாமற்போன போது விடுதலை இயக்கங்கள் அந்த பொறுப்பை கையேற்க வேண்டியதாயிற்று. விடுதலை இயக்கங்கள் இளைஞர்களை பெரும்பான்மையாகக் கொண்டிருந்தபோது இளைஞர்களின் கடின உழைப்பு, நேர்மை, தொலை நோக்கு அரசியல் அணுகுமுறை, தன்னலம் கருதாத தியாகம் போன்றவற்றால், இவ்வியக்கங்களை தமிழ் மக்கள் இது போன்ற கருத்தியல் தடைகளையும் மீறி அங்கீகரிக்க ஏதுவாயிற்று.

விடுதலை இயக்கங்களுக்கு தலைமை தாங்குபவர்களில் பெரும்பான்மையினர் இளைஞர்கள் தான். ஆயினும் இவர்கள் ''பொறுப்பில்லாத, குறும்புத்தனமுள்ள வெறும் இளைஞர்களாக'' தொடர்ந்தும் இருக்க முடியாதென்பதை மறந்துவிடக்கூடாது. ஏனெனில் தமிழ் மக்களுக்கு தலைமை கொடுத்து வழிகாட்டும் பாரிய பொறுப்பை இந்த இளைஞர்கள் சுமக்க வேண்டிய கடமைப்பாடு உடையவர்கள். ஆகவே விடுதலை இயக்கங்கள் தமது தீர்மானங்களை நிறைவேற்றும் போதும், நடவடிக்கைகளில் இறங்கும் போதும் சமுதாயம் பற்றிய நமது பொறுப்பை கருத்தில் எடுத்தல் அவசியம். நமது நடவடிக்கைகள் மூலம் சமுதாயத்தில் உள்ள தமது பொறுப்புள்ள தன்மையை நிரூபிக்க வேண்டியுள்ளது.

இந்த அடிப்படையில் இன்று நடைபெறுகின்ற செயற்பாடுகளை ஆராய்ந்தால் இவை ஆரோக்கியமற்றிருப்பதினை நாம் காணலாம்.

மக்கள் உணவிற்காக வாடும் போது, அந்த மக்களின் உணவு விநியோகம் பாதிக்கக் கூடிய விதமாக கூட்டுறவு கொள்ளைகள்.

தமிழ் மக்களுக்கான உணவு விநியோகத்தை எப்படி நிறுத்தலாம் என அரசு ஆலோசிக்கும் வேளையில் அவர்களுடைய நோக்கத்திற்கு துணை செய்யும் வகையிலான புகையிரத பாதைகள், நெடுஞ்சாலைகள், பாலங்கள், மதகுகள் தகர்க்கப்படுதல்.

மக்கள் பட்டினியால் வாடும் போது அந்த மக்களுக்குசேவை செய்கின்ற சமூகதாபனங்களில் கொள்ளைகள்.

பல நூற்றுக்கணக்கான தமிழ் பாட்டாளிகள் வேலை செய்கின்ற உப்பு கூட்டுத்தாபன கொள்ளைகள் மூலம் ஏழை உழைப்பாளிகளை வீதியில் நிறுத்த அரசுக்குஉதவுதல்.

அனாவசியமாக வாகனங்களை பறிமுதல் செய்து பொறுப்பற்ற முறையில் பாவித்தல், பொது மக்களின் சொத்துக்களை கொள்ளையிடல்.

தம்மோடு ஒத்துவராத பொது மக்களை துப்பாக்கி முனையில் அடிமைப்படுத்த முயல்வது போன்றவற்றை குறிப்பிடலாம்.

இன்றைய சமூக அமைப்பு தவறானதுதான். அதற்காக இன்றைய சமூக அமைப்பை முற்றாக அடித்து நொறுக்குவதினால் மட்டும் ஒருவன புரட்சியாளனாக முடியாது. ஏனெனில் அராஜகவாதிகள் கூட இதனை நிறம்படச் செய்கிறார்கள். ஆனால் புரட்சியாளனின் கடமை என்னவென்றால் பழைய அமைப்புக்களுள்ள இடத்தில் புதியவற்றைபடைப்பதுமாகும். ஆகவே மக்களின் துயரை போக்கக்கூடிய பதில் அமைப்புக்களை தாபிக்காத வரையில் நாட்டில் உள்ள அத்தியாவசிய தேவைகளை செய்யும் அமைப்புகளை அழிப்பது அராஜகமேயன்றி புரட்சியாகாது. இது மேலும் எமது மக்களை துன்பத்தில் ஆழ்த்தி பட்டினியால் இறக்கச் செய்யுமே

ஒவ்வொரு தேசிய இயக்கத்தின் போக்கும் தேசிய அரசுகளின் உருவாக்கத்தை நோக்கிச் செல்கிறது.

– லெனின்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யன்றி மக்களுக்கு விமோசனத்தை தரமாட்டாது.

இயக்கங்களின் மத்தியில் பகைமையை விளைவிக்கும் நோக்கத்துடன் அரசும், சமூக விரோத சக்திகளும் பல நடவடிக்கைகளை இதுவரை மேற்கொண்டு வந்துள்ளன. இயக்கங்களுக்கிடையில் ஒருசரியான புரிந்துணர்வு வராதவரை இந்த வாய்ப்பை எதிரி பயன்படுத்தவே செய்வான். ஆகவே இதுபோன்ற சம்பவங்கள் நிகழும் போது ஒவ்வொரு இயக்கமும் அதற்கான மூலகாரணங்களை சரியாக ஆராய வேண்டுமே அன்றி, வெறும் வதந்திகளை, செய்திகளை அடிப்படையாகக் கொண்டு அப்பிரச்சினைக்கான காரணங்களை ஏதாவது இயக்கங்களின் மீது போட்டுவிடுவது தவிர்க்கப்படல் வேண்டும். இவ்வாறு இலகுவாக பழியைப் போட்டு தப்பித்து விடுவதன் மூலம் எந்தவொரு இயக்கமும் பிரச்சினைகளின் காரணங்களை கண்டறியாது, தமது பொறுப்பில் இருந்து இலகுவாக தப்பித்துக் கொள்ள முயல்வது மிகவும் ஆபத்தான விளைவுகளை வருங்காலத்தில் தோற்றுவிக்கக் கூடியது.

வெவ்வேறு வர்க்கப் பின்னணிகளையும், வெவ்வேறு வரலாற்றுப் பின்னணிகளையும் கொண்ட இயக்கங்களுக்கிடையில் கொள்கையில், நடைமுறை வேலைத்திட்டங்களில் முரண்பாடுகள் தோன்றுவது நியதியே. இந்த முரண்பாடுகளை ஆக்கபூர்வமான முறையில் விமர்சிப்பது விரும்பத்தக்கது. ஏனெனில் இதுபோன்ற விமர்சனங்கள் இயக்கங்களின்

(10-ம் பக்கம் பார்க்க)

# ஒன்றுபட்டால்...

இன்று இலங்கையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் சனநாயக உரிமைகளுக்கான போராட்டங்கள் யாவற்றிலும் முதன்மையானது தமிழீழ விடுதலைப் போராட்டமே. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வெற்றிகள் சிங்கள இனவாத அரசை மிக மோசமாகவே அச்சம் கொள்ளச் செய்கின்றன. சர்வதேச ரீதியாகவும் தமிழின விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு பெருகிக்கொண்டு செல்கிறது. இவை தமிழீழ போராளிகளைப் பெருமை கொள்ளச் செய்யும் விடயங்களே. ஆயினும் இவை மாத்திரமே தமிழின விடுதலையை வெற்றி பெறச் செய்யும் என்று தப்புக் கணக்குப் போடக்கூடாது.

எமது விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கு இவை யாவற்றையும் காட்டிலும் உறுதுணையாக இருக்கக் கூடியது—போராட்டம் முழு மக்களையும் இணைத்ததாக இருப்பதும், எதிரியை சரியான வகையில் இனம் கண்டு நட்பு சக்திகளை இணைத்து போராட்டம் முன்னெடுக்கப்படுவதுமேயாகும். இதனை விடுதலைப் போராட்ட அமைப்புக்கள் யாவும் கவனத்தில் எடுப்பது அவசியமாகும்.

தமிழீழ விடுதலை அமைப்புக்கள் யாவும் ஐக்கியப்பட வேண்டும் என்ற அவசியத்தை விடுதலை விரும்பிகள் அனைவரும் அறிவார்கள்.

இந்த ஐக்கியம் மேலெழுந்த வாரியாக இல்லாமல் இறுக்கமாகவும், நெருக்கமாகவும் அமையவேண்டும் என்ற உண்மையை பொறுப்புள்ள அமைப்புகள் புரிந்திருக்கும்.

இதன் அர்த்தம் தமிழீழ விடுதலையை இன்றைய நிலையில் ஒரு அமைப்பினால் மாத்திரம் வெல்ல முடியாதென்ற உண்மையை எல்லா அமைப்புக்களும் ஒப்புக்கொள்வதைத்தவிர வேறொன்றுமில்லை. ஒரு அமைப்பு தனது இயல்புக்கும், ஆற்றலுக்கும், கருத்தியலுக்கும் ஏற்பவே நடைமுறைகளைத் தீர்மானிக்கும். அதே சமயம் அதன் நடைமுறைகள், பிரச்சாரங்கள் என்பன ஏனைய விடுதலை அமைப்புக்களின் கொள்கை நடைமுறை என்பனவற்றையும் கருத்தில் கொண்டே உருவாக்கப்பட வேண்டும், என்பதில் கவனமாக இருத்தல் வேண்டும். ஒரு அமைப்பின் செயல்பாடுகளின் வெற்றி தோல்வி என்று தனித்துவமாக எதுவும் இல்லை. சகல அமைப்புகளுடன் சேர்ந்து தமிழீழ விடுதலையின் வெற்றியை எமதுசெயல்பாடுகள் எவ்வளவிற்கு முன் தள்ளியிருக்கின்றது என்பதே ஒவ்வொரு அமைப்பின் கேள்வியாக மாறவேண்டும். தமிழீழ விடுதலை அமைப்புக்களில் இணைவு ஏற்படுவதற்கும், ஏற்பட்ட இணைவு பயன்படுவதற்கும் இது அவசியமாகும். இது இல்லாமையால் இன்று புற்றீசல் போல் தோன்றும் பல தமிழின விடுதலை அமைப்புக்களின் பொறுப்புணர்ச்சியற்ற செயல்பாடுகளின் பாதங்களுக்கு தமிழீழ விடுதலைப் போராட்டம் முகம்கொடுக்க நேரிடுகிறது.

இந்தப் பொறுப்புணர்ச்சியின்மையே சில தான்தோன்றித்தனமான நடவடிக்கைகளை மனம்போன போக்கில் முன்னெடுக்கும் சிறுபிள்ளைத்தனத்தின் அத்திவாரமாகும். தமது நடவடிக்கைகள் வெற்றிகரமாக அமையவேண்டும் என்பதில் மட்டும் இவர்கள் குறியாக இருக்கின்றார்களேயல்லாமல், தமிழீழ விடுதலை என்ற இலக்கை கருத்திற்கொண்டு எதையும் செய்வதாக இல்லை. இதனால்தான் போராட்டத்தில் நகமும் சதையுமாக இணைந்திருக்க வேண்டிய மக்களை ஆயுத முனையில் விரட்டியும், துன்புறுத்தியும் அவர்கள் வெறுப்பை சம்பாதித்துக்கொள்கிறார்கள். கூட்டுறவுச் சங்க கொள்ளைகள், பாடசாலையில் பரீட்சை நடைபெறுவதை தடுத்தல், பணம் பொருள் கூட்டுத்தாபனக் கொள்ளை, இலங்கை போக்குவரத்து சபைக் கொள்ளை போன்ற மக்கள் சேவைகளை நாடி நிற்கும் சமூக சேவை தாபனங்களை வலுவிழக்கச் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள்.

இதன் மூலம் அவர்களது அவ்வப்போதைய பிரச்சினைகள் தீர்க்கப்பட்டதாக சில அமைப்புக்கள் வெற்றிப் பெருமிதம் கொள்ளலாம். ஆனால் தமிழீழ விடுதலை குறித்து போராட்ட நடவடிக்கைகளைப்பற்றி மக்களின் கசப்புணர்ச்சியையும், அவநம்பிக்கையையும் எவ்வளவு கொடூரமாக இவை ஏற்படுத்தியிருக்கும் என்பதனை சிந்திக்காமல் இருப்பது வேதனையாகும்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சோவியத் பார்வையில் தமிழீழப் பிரச்சினை

தமிழீழ விடுதலைப் போராட்டம் நீதியானதும் நியாயமானதும் என்று உலக நாடுகள் அங்கீகரித்து வருகின்றன. அது ஒடுக்கப்படும், உரிமைகள் பறிக்கப்படும் மக்களின் எழுச்சிப் போராட்டம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இதனால்தான் உலக விடுதலை இயக்கங்களும் தமிழீழத்தின் விடுதலையை ஆதரிக்கின்றன. தேசிய விடுதலைப் போராட்டம் என்பதை எக்காலத்திலும் அமெரிக்கா மூர்த்தன்யமாக எதிர்த்து வருவது அனைவரும் அறிந்ததே. அப்படி எதிர்க்கும்போது அது ஆதாயத்தையே எதிர் பார்க்கிறது. அமெரிக்காவின் சதித் திட்டத்தை சோவியத் யூனியனின் (சோ. க. க. வின்) அதிகாரபூர்வ ஏடான ''பிராவ்தா'' தனது 23-12-84 இதழில் அம்பலப்படுத்தியதை இங்கு பிரசுரிக்கிறோம்.

## இலங்கை விவகாரத்தில் அமெரிக்க தலையீடு நிறுத்தப்பட வேண்டும்

அமெரிக்க ஜனாதிபதியின் சிறப்புத் தூதுவர் ஜெனரல் வெர்னன் வோல்டர்ஸ் இலங்கைக்கு இரு நாள் விஜயத்தை மேற்கொண்டார். இலங்கையின் வடமாகாணத்தில் மீண்டும் சிக்கலை ஏற்படுத்தியிருக்கின்றதும், சுமார் 400 தமிழர்களின் உயிர்களைப் பலிகொண்டதுமான இனப் பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வைக்காண ஸ்ரீலங்கா அரசுக்கு உதவுவதே இவரின் விஜயத்திற்கான நோக்கமெனக் கூறப்பட்டது.

தமிழ் மக்களின் பாரம்பரியப் பிரதேசங்களில் ஒரு தன்னாட்சிக்காகப் போராடுகின்ற இலங்கையின் சிறுபான்மையினரான தமிழர்களின் பிரச்சினை தீர்க்கப்படாததே இந்தப் பிணக்கிற்குக் காரணமாகும்.

தமிழர்களுக்கெதிரான தாக்குதல்கள் விரிந்த அளவில் இரண்டாம் முறையாகவும் இடம் பெற்றது அமெரிக்க ஜெனரலின் 'சமாதானத்தூதின்' போதுதான் என்பதை அரசியல் அவதானிகள் ஒருமுகமாகச் சுட்டிக் காட்டியுள்ளனர். ''பயங்கரவாதி''களை எதிர்ப்பதற்காக அமெரிக்க ஆயுதங்களைப் பெறுவது சம்பந்தமாகவும் வெர்னன் வோல்டர்சின் விஜயத்தின்போது பேசப்படும் என்று அரசாங்க கட்டுப்பாட்டிலுள்ள ''டெய்லி நியூஸ்'' பத்திரிகையில் வெளியான செய்தியினாலும்கூட இலங்கைக்கு வோல்டர்சின் விஜயம் பற்றி ஆழ்ந்த சந்தேகம் எழக்கூடியதாயிருந்தது.

இலங்கையில்தமிழர்பிரச்சினைக்கு ஒரு சமாதானபூர்வமான அரசியல் தீர்வு காண்பதென்பது அமெரிக்காவின் நிலவியல் சார்ந்த அரசியல் திட்டங்களுக்கு (எதிரானது) பாதகமானதாயிருக்கும் என்ற கருத்தையே இந்த (இந்து சமுத்திர) பிராந்திய நாடுகளிலுள்ள பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் கூறியிருக்கின்றன. இதில் ஒரு விஷயம் கவனிக்கப்படத்தக்கது. ஒரு புறத்தில் விரைந்து தாக்கும் ஆயுதப் படையின் தலைமையகத்திற்கு (Rapid deployment force) தியாகோகார்ஸியா தீவிலுள்ள அமெரிக்க கடற்படைத் தளத்திற்குமிடையிலான இடைவெளியையும் மறுபுறத்தில் பசுபிக் சமுத்திரத்திலுள்ள 7வது கடற்படைக்குமிடையிலான இடைவெளியையும் குறைக்கக் கூடிய திருகோணமலை துறைமுகத்தில் ஒரு இராணுவத்தளத்தை நிறுவுவதற்காக நீண்டகாலமாகவே பெண்டகன் முயற்சித்து வருகிறது என்பதும் அனைவரும் அறிந்ததே,

அமெரிக்காவின் இன்னொரு நோக்கம் இந்தியாவுடனான இலங்கையின் உறவுகளை அறுப்பதற்காக இலங்கையின் உள்நாட்டுச் சிக்கலைப் பயன்படுத்திக் கொள்வதாகும். அதே வேளையில் இலங்கையின் ஐக்கியம், பிரதேச இறைமை என்பவற்றைப் பேணுவதில் இந்திய அரசு எவ்வித மாறுபாடுமற்ற கொள்கையைக் கொண்டிருக்கிறதென்பதும் நாமறிந்ததே. தமிழர் பிரச்சினையில் எல்லாத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதான ஒரு சமாதானபூர்வமான அரசியல் தீர்வு காணப்படுவதற்கு பலதடவைகள் இந்தியா மத்தியத்துவம் வகித்திருக்கிறது.

சிக்கலான இப் பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காண்பதென்பது அமெரிக்காவின் நிலவியல் சார்ந்த அரசியல் சதித் திட்டங்களுக்கு இடராயிருக்கும் என்பது மிக வெளிப்படையானதே.

எனவே இலங்கையின் விவகாரங்களில் அமெரிக்கா தலையிடுவதை நிறுத்த வேண்டும் என்றே இப்பிராந்தியத்தின் அனைத்து சமாதானம் விரும்பும் சக்திகளும் உறுதியாகக் கோருகின்றன.

★

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மீண்டும் மலர்வார்கள்

சிறகடித்துப் பறந்தே
சேவை செய்த எம்
சிட்டுக் குருவிகளைப்
பாவிகளே!
சுட்டுப்பொசுக்கி விட்டீர்
பணியாத காரணத்தால்
கொடுங் கோலர்களே
குண்டுகளால் தாக்குண்டு
குற்றுயிராய்க் குலையுயிராய்
துடிதுடித்த அப்பாவி மக்களை
எண்ணெய் ஊற்றி
எரிக்கவா ஆணையிட்டீர்?
ஏ இரக்கமிலா
அதிகார வர்க்கமே!
பச்சையிளம் கொழுந்துகள்மேல்
பாழ் நெருப்பை இடச்சொன்னீர்
பணிந்தாரா எம் தோழர்கள்?
மமதையாளர்களே!
உங்கள் தோட்டாக்கள்
எம் தோழர்களின்
நெஞ்சைத் துளைத்திருக்கலாம்
ஆனல்
தலைசாய்க்கவில்லை அவர்கள்
உங்கள் தோட்டாக்கள்
எம் தோழர்களின்
மண்டையைப் பிளந்திருக்கலாம்
மண்டியிடவில்லை அவர்கள்

உங்கள் தோட்டாக்கள்
எம் தோழர்களின்
உயிரை மாய்த்திருக்கலாம்
ஆனல்
கொள்கை மாறவில்லை அவர்கள்
அடக்குமுறையாளர்களே
தோட்டாக்களால் கூட
வெல்ல முடியவில்லை உங்களால்
நீங்கள்
மனித உடம்பைவீழ்த்தியிருக்கலாம்
ஆனல்
புகழுடம்பை அல்ல
ஈரமிலா நெஞ்சங்களே
அந்த வீர நெஞ்சங்களின்
துணிவின் முன்னல்
நீங்கள்
தோற்றுத்தான் போனீர்கள்
உங்கள் துவக்குகளுக்கு
சக்தி மட்டும் இருந்தால்
கோழைகளே!
அவை உங்களைக்கண்டு
எள்ளி நகையாடும்
எத்தர்களே!
உங்கள் அகராதியில்
'தொண்டு' என்பதற்கு
'மரணம்'தான் பொருளா?
மரணம் உங்களுக்கு
மலிவாக இருக்கலாம்
அதிகார வெறியர்களே!
உங்களுக்கு எச்சரிக்கை!
தோழர்களின் மரணங்கள்
புரட்சியின் வித்துக்கள்
அதோ அந்த வீரர்களாய்
எம் தோழர்கள்
மீண்டும் மக்களிடம்
மலர்வார்கள்
அலை அலையாய் வருவார்கள்
நிலை குலையாது
மலை போலே நிற்பார்கள்
அன்று உங்கள் துவக்குகளும்
களைத்து விடும்
முடிவில் எரிமலையாய்
அவர்கள் சீறும்போது
பூமிப் பரப்பில்
உங்கள் பேயரசு
பொசுங்கிச் சாம்பலாகும்!
புது வரலாறு தொடங்கும்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கிழக்கு தீமோர் விடுதலைப் போராட்டம்

முதலாளித்துவப் பொருளாதார நெருக்கடிகளினாலும், முதலாளித்துவ இன, மத, நிறபேத வெறியாட்டங்களினாலும் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் தேசிய இனங்கள் தமது தேசிய சுதந்திரம், சுயாதிபத்தியம், பிரதேச ஒருமைப்பாடு, சமூகப் பொருளாதார விமோசனம் ஆகியவற்றை உள்ளடக்கிய முழு விடுதலைக்காக நடத்திக்கொண்டிருக்கும் வீரம் செறிந்த புரட்சிகரப் போராட்டங்கள் இன்று உலகின் பல பாகங்களிலும் நடந்து கொண்டிருக்கின்றன.

மேற்கு அவுஸ்திரேலியாவிற்கு வடக்கே 500 கி. மீ. தொலைவில் உள்ள கிழக்கு தீமோர் கி. பி. 1520 முதல் போர்த்துக்கேயரின் குடியேற்ற நாடாக இருந்து வந்தது. இங்கு 1912ல் முதல் முதலாக விடுதலைக்கான போராட்டம் ஆரம்பமானது. இங்குள்ள மக்கள் தொகை 1975ம் ஆண்டு கணிப்பின்படி 6,25,000 பேராகும். இம் மக்கள் கிறீஸ்தவ மதத்தை பின்பற்றுகின்றனர். இவர்கள் தாய்மொழி டெட்டும் (Tetum) ஆனால் போர்த்துக்கேய மொழியையும் பேசுகின்றனர்.

1974ல் போர்த்துக்கலில் ஏற்பட்ட ஆட்சி அதிகார மாற்றங்களால் கிழக்கு தீமோரிலிருந்து போர்த்துக்கேயர் வெளியேறவேண்டிய காலமும் வந்தது. இங்கு ''உடனடியாக விடுதலை,'' ''படிப்படியாக விடுதலை,'' ''விடுதலை வேண்டாம் இந்தோனேசியாவுடன் இணைதல்'' என்ற மூன்று கருத்தோட்டங்களின் அடிப்படையில் மூன்று இயக்கங்கள் செயல்ப்படத் தொடங்கின.


''உடனடியாக விடுதலை'' என்ற கருத்தோட்டமுள்ள இயக்கமே மிக நல்ல கட்டுக்கோப்பான மிகப் பெரிய இயக்கமாக பிரெற்றலின் (Fretilin) என்ற பெயருடன் இயங்கலானது. 1975 நவம்பர் 28ஆம் நாள் இவ்வியக்கம் ''கிழக்கு தீமோர் சனநாயகக் குடியரசின்'' விடுதலைப் பிரகடனத்தை வெளியிட்டது.

1975 டிசம்பர் 7ம் நாள் இந்தோனேசியா கிழக்கு தீமோர்மீது முழு அளவிலான ஆக்கிரமிப்பில் இறங்கியது. 1975 டிசம்பர் 12ம் நாள் ஐக்கிய நாடுகள் சபை இந்தோனேசியா தனது ஆக்கிரமிப்பை கிழக்கு தீமோரில் இருந்து விலக்கிக்கொள்ள வேண்டும் என்று ஒரு தீர்மானத்தில் கேட்டுக்கொண்டது.

1976 மே—ஜூலை மாதங்களில் கிழக்கு தீமோரை தனது 27வது மாநிலமாக இணைக்கும் பணிகளில் இந்தோனேசியா வெற்றிகண்டது.

1976 நவம்பர் 19ம் நாள் வெளியான செய்திகளின் படி 85 வீதமான கிழக்கு தீமோர் பிரதேசம் 'பிரெற்றலின்' கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகவும் 60,000 ஆக்கிரமிப்பாளர்களால் கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

இந்தோனேசியாவின் ஆக்கிரமிப்பிற்குப் பிறகு கிழக்கு தீமோர் மக்கள் இந்தோனேசிய மொழியில் தான் பேசவேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டனர். தெருப் பெயர்கள் உட்படப் பெயர்கள் அனைத்தும் இந்தோனேசிய மொழியில் மாற்றப்பட்டுவிட்டது. அரசு அலுவலகங்கள் அனைத்தும் இந்தோனேசிய மொழியில் மாத்திரமே நிர்வாகம் நடைபெற்றன. போர்த்துக்கேய மொழி முற்றாக தடைசெய்யப்பட்டன. பாடசாலைகளில் இந்தோனேசிய மொழியில் மாத்திரம் கல்வி கற்பிக்கப்படுகின்றன. கிழக்கு தீமோர் மக்களின் தாய் மொழியான 'டெட்டும்' (Tetum) எழுதப் படிக்கத் தெரிந்தவர்களை இந்தோனேசியா திட்டமிட்டு அழித்து வந்துள்ளது.




அந்நியர்கள் யாரும் இங்கு செல்ல எளிதில் அனுமதிக்கப்படுவதில்லை. அப்படி மீறி அனுமதிக்கப்பட்டாலும் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படுவதில்லை. 1975 அக்டோபர் 6ம் நாள் 5 அவுஸ்திரேலிய செய்தியாளர்கள் கிழக்கு தீமோரில் கொல்லப்பட்டனர். இவர்கள் கம்யூனிஸ்ட்டு செய்தியாளர்கள் என இந்தோனேசியா அறிவித்து விட்டது. இங்கு கடுமையான தணிக்கைமுறை உள்ளது. கடிதங்கள் தணிக்கையின் பின்னரே வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகிறது. அவுஸ்திரேலியாவின் டாவின் நகரிலிருந்து இயங்கி வந்த கிழக்கு தீமோர் சனநாயகக் குடியரசின் வானொலி நிலையத்தை 1976 அக்டோபரில் தடைசெய்து இந்தோனேசியாவை மகிழ்வித்தது அவுஸ்திரேலியா. 1976 டிசம்பர் 3ல் 'பிரெற்றலின்' வெளியுலக வானொலித் தொடர்புகள் முற்றாகத் துண்டிக்கப்பட்டன. தீமோரின் ஒவ்வொரு கிராமமும் இந்தோனேசிய கூலிப் படைகளால் சுற்றி வளைக்கப்பட்டு 14 வயதிற்கும் 60 வயதிற்கும் இடைப்பட்ட ஆண்கள் கொல்லப்பட்டனர். 13க்கும் 50க்கும் இடைப்பட்ட வயதுப் பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டனர். துறைமுக

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நகரச் சிறைச்சாலையில் கைதிகள் கொல்லப்பட்டு காடுகளிலும் கடலிலும் வீசப்படுவது அங்கு சாதாரணமான நிகழ்ச்சியாகிவிட்டது.

1980ல் இந்தோனேசியப்படை சரணடையும் தீமோரிகளுக்கு மன்னிப்பு வழங்குவதாக அறிவித்தது. கடும் பட்டினியால் விரக்தியடைந்த தீமோரியர் சரணடைந்தனர் இவர்களில் தீமோர் மொழியில் எழுத, படிக்கத் தெரிந்தவர்களை முதுகுப்புறமாக நிற்க வைத்து சுட்டுக் கொன்றனர். ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு மையம் என்னும் சுதந்திர அமைப்பு ஒன்று வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையின்படி அண்மைக்காலங்களில் எந்த ஒரு சண்டையிலும் கொல்லப்பட்டதை விட அளவுக்கு அதிகமானோர் கிழக்கு தீமோரில் கொல்லப்பட்டுள்ளனர். எல் சல்வடோர், சீன - வியட்நாம் எல்லைப் போர், எதியோப்பியா—எரிட்டீரியா மோதல்கள் இம்மூன்றிலும் சேர்த்து இறந்தோர் எண்ணிக்கையைவிட இத்தொகை அதிகம். ஆப்கானிஸ்தானிலும், ஈரான்—ஈராக் சண்டையிலும், லெபனானிலும் இறந்தவர்களைக் காட்டிலும் தீமோரில் இறந்தவர்கள் தொகை அதிகமாகும். கிழக்கு தீமோர் மக்களின் தொகையில் மூன்றில் ஒரு பகுதியில் கிட்டத்தட்ட 2,2500 பேர் இறந்துள்ளனர். இவர்களில் கூலிப்படைகளால் கொல்லப்பட்டவர்கள், பட்டினியால் இறந்தவர்கள் தொகையும் அடங்கும்.

இவை எல்லாம் கிழக்கு தீமோர் மக்களின் விடுதலை வேட்கையை மேலும் வேகப்படுத்தியுள்ளதேயன்றி பின்னடையச் செய்யவில்லை. 1982ல் வெளியுலகத்திற்கு கிடைத்த தகவலின்படி கிழக்கு தீமோர் தேசிய விடுதலைப் படையில் 6800 போராளிகள் இருந்தனர். ஆனால் அவர்களிடம் போதிய ஆயுதங்கள் இல்லாமையால் நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

கிழக்கு தீமோரின் புவியியல் சூழலும் ஆயுதங்கள் சேகரித்துக் கொள்ள வாய்ப்பாக அமையவில்லை கிழக்கு தீமோருக்கு அருகிலுள்ள அண்டை நாடு 500 கி. மீ. அப்பால் உள்ள அவுஸ்திரேலியா தான் கிழக்கு தீமோரின் வளமான பகுதிகளில் தொடர்ந்து குண்டுத் தாக்குதல்களுக்குள்ளானதால் அங்கு கடுமையானபஞ்சம் உருவாகியது. இதனால் பிரெற்றலின் பல்வேறு பகுதிகளில் மக்களை சரணடையுமாறு ஒரு தந்திரத்தை கையாண்டு மக்களிடையே விரிந்த அளவில் செய்தித் தொடர்புகளை விரிவுபடுத்திக் கொண்டு உணவுப் பண்டங்களையும் பெற்றுக் கொண்டது.

இவர்களுடைய போராட்ட தன்மைகளாலும் கடுமையான பிரச்சாரங்களாலும் இவர்களுடைய போராட்டம் உலக அரங்கில் அங்கீகரிக்கப்பட்டன. 1979 நவம்பர் 23ம் நாள் ஐ. நா. சபையில் கிழக்கு தீமோர் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவாக தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. 1979 டிசம்பரில் நடைபெற்ற கூட்டுச்சேரா நாடுகளின் மகாநாட்டில் கியூபா கிழக்கு தீமோர் விடுதலைக்கான உரிமையை ஆதரித்தது. 1983 செப்டம்பர் 6ல் ஐ.நா. சபையின் மனிதஉரிமைகளுக்கான துணைக்குழு கிழக்கு தீமோரில் இந்தோனேசியா நடத்திய இனப்படுகொலையை வன்மையாக கண்டித்து கிழக்கு தீமோர் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஐ.நா. அங்கீகரிக்கவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியது.

ஒடுக்கப்பட்ட கிழக்கு தீமோர் மக்கள், அவர்களின் தேசிய விடுதலைப் படையான 'பிரெற்றலின்' இதன் தளபதி தோழர் கேரால குஸ்மாவோ (Kayrala gusmao) பக்கமேஉலகின் முற்போக்கு சக்திகள் நிற்கின்றன.

★

# ஆயிரத்தில் ஒரு வார்த்தை

''பெரும்பான்மை சிங்கள மக்களின் உரிமைகள் பாதுகாக்கப் படாவிட்டால் நாடு சுபீட்சமடையாது''

அமைச்சர் முகம்மது இவ்வாறு கூறினர் என்ற செய்தியைக் கேட்டு முகம் சுழிக்கும் 'அன்பர்களே!

வருந்தாதீர்கள்!

அமைச்சர் சரியாகத்தான் கூறியிருக்கிறார்.

பெரும்பான்மை சிங்கள மக்கள்-அவர்கள் யார்?

விவசாய தொழிலாள மக்களே அன்றி அவர்கள் வேறு யாரும் அல்ல. அல்லவா!

அந்த உழைக்கும் மக்களின் உரிமைகள்தான் இன்று சிறிலங்காவில் அடக்குமுறை சட்டங்களால் ஒடுக்கப்பட்டு வருகின்றனவே.

அதற்காகத்தான் அமைச்சர் இவ்வாறு பேசியிருக்கிறார்.

நாம் அமைச்சர் முகம்மதுடன் உடன்படுகிறோம்.

அவர் கருத்தை வாழ்த்துகிறோம்! வரவேற்கிறோம்!!

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

# தென்னாபிரிக்க விடுதலைப் போராட்டம் 3

## போராட்டம்

1961ல் ஆ.தே.கா தடைசெய்யப்பட்டதுடன் அதன் முக்கிய தலைவர்கள் கைது செய்யப்பட்டார்கள். ஏனைய தலைவர்கள் ஆயுத அமைப்பை உருவாக்கினர்கள். இவ்வமைப்பு ஆங்கிலத்தில் Umkhonto de sizive "அதாவது தேசத்தின் ஈட்டி என அழைக்கப்பட்டது. இதன் சுருக்கம் M. K ஆகும் ஆனால் ஆரம்பத்திலேயே பாதிப்பு ஏற்பட்டது. இதன் தலைவர்கள் ரிவோனியா (Rivonia) என்னும் இடத்தில் ஒரு பண்ணையில் (farm) கைது செய்யப்பட்டனர். இவர்கள் பின்னர் வெள்ளை நீதிமன்றத்தில் குற்றவாளிகள் என கணிக்கப்பட்டு ஆயுள் சிறைத்தண்டனைக்கு ரொபின் தீவிற்கு (Robbin island) அனுப்பப்பட்டனர். இவர்களில் ஒருவரான நெல்சன் மண்டேலா (Nelson Mandela) ஒரு சிறந்த பேச்சாளர். இவரே ஆ.தே.காவின் உண்மையான தலைவராகவுள்ளார். இவருடன் சில இந்தியர்களும் (தமிழர்களும்) (Mac Maharaj) ஆயுள் தண்டனையை அனுபவித்துக் கொண்டுள்ளார்கள்.

ரிவோனியா பண்ணையில் M. K. யின் தலைவர்கள் கைது செய்யப்பட்டது ஆயுதப் போராட்டத்திற்கு ஒரு பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது. எனினும் பலர் நாட்டைவிட்டு வெளியேறி சோசலிச நாடுகளின் உதவியுடன் பயிற்சிகளைப் பெற்று ஆயுதப் போராட்டத்தை தொடர்ந்து நடத்தினர்கள். அதே நேரத்தில் தடை செய்யப்பட்ட தென்னாபிரிக்க பொதுவுடைமை கட்சிக்கும் ஆ.தே. காவிற்கும் இடையில் ஒரு ஐக்கிய முன்னணி உருவானது. இதன் விளைவாக ஆயுதப் போராட்டம் மேலும் வளர்ச்சி அடைந்தது.

அதேநேரத்தில் ஆ.தே.கா தனது அரசியல் போராட்டங்களை தொழிலாளர் அணி, மாணவர் அணிமூலம் தொடர்ந்து நடாத்தியது இச்சந்தர்ப்பத்தில் கறுப்பு உணர்வு அமைப்பின் தலைவரான ஸ்டீவ் பிக்கோ (Steve Biko) பொலிசாரினால் 1976ல் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு சிறையில் கொல்லப்பட்டார். இதனை வெள்ளை அரசு தற்கொலை என கூறியது. கொதிப்படைந்த ஆபிரிக்க, இந்திய, கறுப்பு இன மாணவர்கள் இதற்கெதிராகவும் அரசின் கல்விக் கொள்கைக்குஎதிராகவும் போராட்டங்களில் இறங்கினர்கள். இதன் விளைவாக 1976ல் தென்னாபிரிக்காவின் தலைநகரத்தை சுற்றியுள்ள கறுப்பு பகுதியில் மாணவர்களின் கிளர்ச்சி கலவரங்களாக மாறியது. அரசுப்படைகள் கண்டபடி மாணவர்களை(ஏன்குழந்தைகளையும்) சுட்டுத் தள்ளினர். பலத்த பொருள் சேதங்களின் பின்னர் கலவரங்கள் கட்டுப் பாட்டின் கீழ்கொண்டுவரப் பட்டது. ஆனல் இதன் விளைவாக பெருமளவு மாணவர்கள் M.K.யில் சேர்ந்தார்கள்.

M K யின் வளர்ச்சிகூட அதன் போராட்டங்களும் அதிகரித்தன. 1980ல் சசோல் என்னுமிடத்தில் கரியிலிருந்து எண்ணெய் தொழில் நிலையம் வரை தாக்கப்பட்டு நாசமாக்கப் பட்டது. அடுத்தபடியாக பொலிஸ் நிலையங்கள் தாக்கப்பட்டன. M.K. தனது போராட்டத்தை ஆயுதம் தாங்கிய பிரசுரம் என அழைக்கின்றது. இப்போராட்டத்தில் பொருளாதார இலக்குகள், அரசு இயந்திர இலக்குகள் தாக்கப்பட்டுள்ளன. பொருளாதார இலக்குகள் பின்வருமாறு

1) மின்சார நிலையங்கள்
2) புகையிரதத் தொடர்பு நிலையங்கள்
3) சசோல் அணுசக்தி உற்பத்தி நிலையம்

இந்நடவடிக்கைகள் மூலம் தென்னாபிரிக்காவின் பொருளாதாரத்தை பலவீனப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தென்னாபிரிக்காவின் பொருளாதாரம் சர்வதேச கம்பனிகளில் (அமெரிக்கா, பிரித்தானியா, பிரேஞ்சு, ஜெர்மானி ஜப்பான்) தங்கியுள்ளதால் இந்நடவடிக்கைகள் வெளிநாட்டு கம்பனிகளை பாதிக்கின்றது. இது நொலநோக்கில் தென்னாபிரிக்க இனவெறி அரசிற்கான சர்வதேசிய முதலாளிகளின் ஆதரவை பலவீனப்படுத்தும்.

அரசு இயந்திர இலக்குகள் பின்வருமாறு

1) பொலிஸ் நிலையங்கள்
2) பண்டுஸ்தான் (Bantustan) கொள்கையை பிரதிபலிக்கும் நிறுவனங்கள்
3) அரசு இயந்திர வாகனங்கள் பிரிட்டோரியாவில் கடந்த வருடம் நடைபெற்ற குண்டு வெடிப்பில் ஏறக்குறைய 18 விமானப்படை வீரர்கள், ஊழியர்கள் கொல்லப்பட்டனர்.

இப்படிப்பட்ட நடவடிக்கைகள் மூலம் ஆ.தே.கா அரசு இயந்திரத்தை பலவீனப்படுத்தி ஒருபெரும் கிளர்ச்சிக்கான சூழ்நிலைகளை ஏற்படுத்த முயற்சிக்கின்றது இக்கிளர்ச்சியில் தொழிலாளர்கள், விவசாயிகள் முதலியோர் இனவேறுபாடு அற்ற ரீதியில் கலந்து கொள்வார்கள் என ஆ.தே.கா கருதுகின்றது. இதன் மூலம் ஒரு சமதர்ம தென்னாபிரிக்கா தொழிலாளர் வர்க்கத்தின் தலைமையில் உருவாகும்.

www.tamilarangam.net



M. K. ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடும் அதேநேரத்தில் ஆ.தே.காவின் ஏனைய அமைப்புகள் வெவ்வேறு வகையான போராட்டங்களில்ஈடுபடுகின்றது. ஆ.தே.காவின் தொழிலாளர் அமைப்பு பொருளாதார அரசியல் உரிமைகளுக்கான வேலை நிறுத்தங்களில் ஈடுபடுகின்றது. இதன் விளைவாக கடந்த வருடம் சகல அரசாங்க தொழிலாளர்களையும் இணைந்த தொழிற் சங்கம் அமைக்க வெள்ளை அரசு அனுமதித்தது. இதே போன்ற பல போராட்டங்களை ஆ. தே. கா மாணவர் அமைப்புகள் நடத்துகின்றது.

இனவேறுபாடற்ற ரீதியில் ஆ. தே.கா தென்னாபிரிக்காவில் பெரும்பான்மை ஆதரவைப் பெற்றுள்ளது ஆ.தே.காவின்தலைவர்களாகியநெல்சன் மண்டேலா, அகமது கத்தரேலாடா முதலியோர் தேசிய தலைவர்களாக கருதப்படுகின்றனர் வெள்ளை இனத்திலும் இன வெறியர்களைத் (racist) தவிர்ந்த ஏனைய வெள்ளையரின் ஆதரவு ஆ.தே காவிற்கு உள்ளது. ஆ.தே.காவிற்கும் தென்னாபிரிக்க பொதுவுடமை கட்சிக்கும் இடையிலான ஐக்கிய முன்னணி சர்வதேசிய உறவுகளைப் பலப்படுத்தியுள்ளது. அங்கோலா, மொஸாம்பிக், சிம்பாபே போன்ற நாடுகளில் காலனித்துவத்திற்கெதிரான போராட்டங்கள் அப்பகுதிகளிலிருந்து விடுதலைஇயக்கங்களுடன்ஆ.தே.கா தோளிற்கு தோள் நின்று போரடியது. இதன் விளைவாக விடுதலையடைந்த பின்னர் இந்த நாடுகள் ஆ.தே.காவின் போராட்டத்திற்கு ஆதரவு அளிக்கின்றன. குறிப்பாக அங்கோலாவின் ஆதரவு மிகவும் பிரம்மாண்டமானது. இந்நாடு தென்னாபிரிக்க படைகளால் மிகவும் மோசமாக தாக்சப்பட்டிருந்தபோதிலும் ஆ.தே.காவிற்கும் நமீபியாவில் விடுதலைக்காக போராடும் ஸ்வாப்போ (swapo) இயக்கத்திற்கும் பூரண ஆதரவு வழங்குகின்றது.

தென்னாபிரிக்காவின் ராணுவம் ஆபிரிக்காவில் மிகவும் பலம் வாய்ந்த ராணுவம் ஆகும். இவ்ராணுவம் அமெரிக்கா, பிரித்தானியாவின் ஆதரவைப் பெற்றுள்ளது. ஆ.தே.கா மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு பழிவாங்கும் நோக்கத்துடன் இவ்ராணுவம் அண்டை நாடுகளை மிகவும் மோசமாக தாக்குகின்றது. மொஸாம்பிக், அங்கோலா லெசோத்தோ போன்ற நாடுகளில் நூற்றுக்கணக்கான மக்கள் ஒவ்வொருதடவையும் தென்னாபிரிக்க அரசின் குண்டுவீச்சினாலும்அதிரடிப் படைத்தாக்குதல்களாலும் கொல்லப்படுகின்றனர். இப்படிப்பட்ட கெடுபிடிகளுக்கெதிராக அண்டை நாடுகளின் ஆதரவு குறிப்பாக அங்கோலாவின் ஆதரவு மிகவும் பிரமாண்டமானது. 1975ல் தென்னாபிரிக்காவின் படையெடுப்பினால் அங்கோலாவின் தலைநகரமாகிய லுவாண்டா வரையிருந்த பகுதி கைப்பற்றப்பட்டு நாசமாக்கப்பட்டது. இறுதியில் அங்கோலா மக்கள் ராணுவமும், கியூபா சர்வதேசிய போர்வீரர்கள் (volunteers) உதவியுடன் இப்படையெடுப்பு முறியடிக்கப்பட்டு மீண்டும் தென்னாபிரிக்க படைகள் பின்வாங்கப்பட்டன. தென்னாபிரிக்க இனவெறி அரசு அண்டை நாடுகளில் உள்ள அரசுகளை எதிர்புரட்சிகள் மூலம் கவிழ்க்க முயற்சி செய்கின்றது. அந்நாடுகளின் பொருளாதாரத்தை நாசமாக்க முயற்சி செய்கின்றது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் குறிப்பாக அங்கோலாவின் ஆதரவு பாராட்டத்தக்கது.

இவ்வாறு தென்னாபிரிக்க விடுதலைப் போராட்டம் முன்நடந்து செல்கின்றது. இன்று M. Kயின் பயிற்சி பெற்ற 5000 பேர் தென்னாபிரிக்காவிலிருந்து கொண்டு போராட்டம் நடாத்துகின்றனர். இப்போராட்டத்திற்கு சர்வதேசிய ரீதியில் குறிப்பாக சோசலிச நாடுகள் வழங்கும் ஆதரவு மகத்தானது இப்போராட்டத்தின் முடிவில் ஒரு சமதர்ம தென்னாபிரிக்கா உருவாகும் என்னும் நம்பிக்கை தென்னாபிரிக்க மக்களிற்கு உண்டு. இந்நம்பிக்கையை இனவெறி அரசின் அடக்குமுறையோ கொடுமையான சித்ரவதையோ நசுக்கமுடியாது.

# சிவபூசைக்கு வந்த கரடிகள்

வடபகுதியில் இராணுவத்தின் அட்டகாசம் இளைஞர்களை மாத்திரமன்றி பெண்கள், சிறுவர்கள், முதியோர் உட்பட அனைவரையும் கதி கலங்க செய்கிறது. மக்களின் நாளாந்த வாழ்வு கிலி கொண்டதொன்றாகி விட்டது. கண்டபடி ஊரைச் சுற்றி வளைத்து ஆட்களை கைது செய்வதும், சுட்டுத்தள்ளுவதும் வழமையாகிவிட்டது.

இந்த அடாவடித்தனங்களை கண்டித்து இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி வடபகுதியின் 18 தொழிற்சங்கங்களை சேர்த்து சனவரி5ல் யாழ் றிம்மர் ஹோலில் ஒரு கண்டனப் பொதுக்கூட்டத்தை ஏற்பாடு செய்தார்கள்.

கூட்டம் 9-00 மணிக்கு ஆரம்பமாகும் என அறிவித்திருந்தார்கள். வாகனப் போக்கு வரவு இன்மையால் குறைந்த எண்ணிக்கையினரே வந்திருந்தார்கள். 10-00 மணிககு கூட்டத்தை ஆரம்பிக்க ஏற்பாட்டாளர்கள காத்திருந்தார்கள். அதற்கிடையில் இராணுவம் மண்டபத்திற்குள் திமுதிமுவென்று உள்ளே வந்தார்கள். கூட்ட ஏற்பாட்டாளர்கள அஞ்சி ஒடுங்கினார்கள்.

அவர்கள் அட்டகாசத்தால் மண்டபம் கதி கலங்கியது.
பிறகு நடந்ததை கூறவும் வேண்டுமா! கூடாது;
இலங்கையின் சனநாயக பிதாக்களின் பிஞ்சு முகம் சுண்டிவிடும் போங்கள்!

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வளர்ச்சிக்கு அத்தியாவசியமானது. அத்துடன் மக்கள் இயக்கங்களை நன்கு புரிந்து கொள்ள அவசியமானது. எனவே விமர்சிக்கும் உரிமை என்பது அந்த இயக்கங்களின் வாழ்வு உரிமை போன்று அடிப்படையான ஒன்றாகும். ஆனால் இதனை குறுகிய நோக்கில் தத்தம் இயக்க நலன்களை மட்டும் கருத்தில் கொண்டு துஸ்பிரயோகம் செய்வது தவறானதாகும். தமது இயக்கத்தின் ''மலிவான விளம்பரம்'' ஏனைய இயக்கங்களை வீழ்த்துவதனால் தம்மை வளர்க்கும்நோக்கம்கொண்டே அவதூறுகளை, அபாண்டமான பழிகளை, வதந்திகளை வெளியிட்டு அதையே விமர்சனம் என்று காட்ட முனைவது தவறான போக்காகும். ஒவ்வொரு இயக்கமும் தம்மை வளர்த்துக் கொள்வதாக எண்ணி அவதூறுகளை மக்கள் முன் வைப்பது மொத்தத்தில் மக்கள் அனைத்து இயக்கங்களையும் நிராகரிக்கக் கூடிய சூழலையே தோற்றுவிக்கக்கூடியது. மக்கள் விடுதலை இயக்கங்களில் நம்பிக்கை இழந்து முன்னைய முதலாளித்துவ தலைமைகளின் பிற்போக்கு தனங்களில் நம்பிககை வைக்க ஆரம்பிக்கலாம். வரலாற்றை ஒரு பொழுதும் பின்நோக்கி நகர்த்த இடமளிக்க கூடாது. இதனால்தான் இன்றைய விடுதலைபோராட்ட அமைப்புக்களிடையே பிற்போக்குத்தனங்களுக்குஎதிராக இறுக்கமான ஐக்கியம் ஏற்படவண்டும் என்பதை வலியுறுத்துகிறோம்.

கடந்த காலத்தில் இந்த ஐக்கியத்திற்கான முயற்சிகளின் போது விடுதலைப் போராட்டத்தின் நன்மை கருதியில்லாமல் தமது சொந்த நன்மை கருதி செயல்பட்டது போன்ற குறுகிய மனோபாவம் இழையோடியதைக் காணநேரிடுகிறது. நிதி திரட்டுதல் பிரச்சாரம் தமது ஆதரவாளர்களையும் வெகுசனங்களையும் திருப்திபடுத்த வேண்டும் என்பதற்காக மாத்திரம் ஏற்படுத்தப்படும் ஐக்கியங்களால் தமிழீழ விடுதலைக்கு எந்தப்பயனும் ஏற்படப் போவதில்லை. இத்தகைய ஐக்கியம் சந்தர்ப்பவாத அடிப்படையிலேயே உருவாகின்றன. தமது தனித்துவங்களை விட்டுக் கொடுக்க கூடாதென்ற மமதையும், எப்பொழுதும் ஒரு சிறு குழுவாக இயங்க வேண்டும் என்ற பூரிப்பை கைவிட முடியாத அசட்டுத்தனமும் இத்தகைய ஐக்கியத்திற்கு காரணமாகிறது.

நாம் ஐக்கியம் எனும் பொழுது இவ்வாறு செயலூக்கமற்ற ஐக்கியங்களை முன்மொழியவில்லை. பல்வேறுபட்ட சக்திகளின் தொகுப்பாகவே ஐக்கியம் விளங்க வேண்டும். கொள்கை அடிப்படையில், நடைமுறை வேலைத்திட்ட அடிப்படையில் போராட்ட தந்திரோபாயங்களின் அடிப்படையில் இணைந்திருப்பதே தமிழீழ விடுதலைக்கு தேவையான ஐக்கியமாகும், இது குறுகிய மனோபாவத்தை தகர்த்து, பிற்போக்கு சக்திகளுக்கு எதிராக இதுவரை விடுதலைஇயக்கங்கள் பெற்ற வெற்றியை தொடர்ந்தும் வளர்த்துச் செல்லும் வாய்ப்பை அளிக்கும். இத்தகைய ஐக்கியத்தில் தமது இயக்கம் தனிப்பட்ட வகையில் என்ன லாபம் பெறும் என்ற கேள்வியை விட தமிழீழ விடுதலையை இது எவ்வளவு வேகமாக முன்தள்ளும்என்பதையே ஒவ்வொரு அமைப்பும் குறியாக கொண்டிருக்க வேண்டும். இந்த ஐக்கிய அமைப்புகளை மேலும், மேலும் நெருங்கி இறுகி வரக்கூடிய வாய்ப்பை கொண்டிருக்க வேண்டுமென்பதனால் அத்தகைய ஐக்கியமானது ஐக்கியமும் போராட்டமும் எனும் அடிப்படையில் வளர்த்தெடுத்தல் அவசியமாகும். ஐக்கியப்பட்ட-நட்பாகிவிட்ட அமைப்பு எது செய்தாலும், சொன்னாலும் அதனை ஒருவருக்கொருவர் விமர்சிக்க கூடாது என்று கண்மூடித்தனமாக இருப்பது உண்மை ஐக்கியமாகாது. அதாவது இது போராட்டம் இல்லாத ஐக்கியமாகும். நாம் விரும்புவது அமைப்புக்கள் ஐக்கியப்படும் வேளையில் சரியான கொள்கையை, நடைமுறையை தீர்மானிப்பதில் தொடர்ந்தும் பரஸ்பரம் போராடிக் கொண்டிருக்க வேண்டும். இதுவே உள சுத்தமான ஐக்கியமாகும்.

கடந்த காலத்தில் விடுதலை இயக்கங்களிடையே ஏற்பட்ட இணைவு முயற்சிகள் இவ்வகையில் நம்பிக்கையூட்டுவதாக இல்லை. குறுகிய லாபம், மலிவான விளம்பரம் என்ற வர்த்தக நோக்கிலேயே இவ் இணைவுகள் ஒப்பேறியது வருந்துதற்குரியது. ஐக்கியப்பட்ட அமைப்புக்கள் பரஸ்பரம் நட்புறவின்மையும், சந்தேக கண்ணோடு பார்ப்பதும் விடுதலைக்கான விமோசனம் ஆகாது.

தமிழீழ விடுதலை தமிழ் மக்களின் முழுப் பலத்தையும் கொண்டு முன்னெடுக்கப்படுவதற்கு முற்போக்கு அமைப்புக்கள் யாவும் தம் சிறு சிறு சச்சரவுகளை நீக்கி உளசுத்தமாக இணைந்து செயற்பட வேண்டும்.

இன்று விடுதலை தாபனங்களிடையே ஐக்கியம் என்பது தாபனங்களின் வரலாற்றுக் கடமை. இதனை தட்டிக் கழிக்காது செய்ய வேண்டும் இன்றைய தமிழ் மக்களின் வேண்டுகோள் இதுவே. நாமும் இதனையே உறுதியாக முன் வைக்கின்றோம்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# நினைவு அஞ்சலி



**தோழர் ரங்கன்**

மாதகல்-விபுலானந்தர் வீதியைச் சேர்ந்த சரவணமுத்து மகேஸ்வரன் (ரங்கன்) தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் படைப்பிரிவின் வீரனாவார். அஞ்சா நெஞ்சமும், மக்களின் விடுதலைக்கு தன்னை முழுமையாக இணைத்துக் கொண்ட அழுத்தமும், அவரை இறுதிவரை எதிரியுடன் போராடி உயிரை மலரப்போகும் தமிழீழத்திற்கு காணிக்கை ஆக்கியது.

சாதாரண குடும்பத்தில் பிறந்த இவர் தமிழீழ விடுதலைக்காக தன்னை இணைத்துக் கொண்டார். ஒடுக்கப்படும் மக்களுக்காக குரல் கொடுத்த இவர்-காத்திராப்பிரகாரமாக எதிரியைச் சந்திக்க நேர்ந்த போது-முன்னணியில் நின்று எதிரியுடன்போராடி வீரமரணம் அடைந்தார்.



**தோழர் அமுதன்**

கொக்குவிலைச் சேர்ந்த—நந்தகுமார் (அமுதன்) அரசபடையினரால் சுற்றிவளைக்கப்பட்டு அவர்களின் அடக்குமுறைக்கு கருவியாம் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற செய்தி கழகத்தின் தோழர்களை சிலிர்க்க வைத்தது. அமுதன்—எதையும் தாங்கும் இதயம் கொண்டவர், வீரர், படையையே தலைமை தாங்கிச் செல்லும் ஆற்றல் பெற்றவர் அவர்—எதிரியால் சுற்றிவளைக்கப்பட்டபோது—வீரத்துடன் போராடி வீரமரணம் அடைந்தார்.

இவர்களை இழந்து நிற்கும் சகோதரர் சகோதரிகளுடன் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றது.

# தமிழர் நல மருத்துவ அமைப்பு

## MEDICAL UNIT FOR SERVICE OF TAMILS

தமிழீழத்தில் இன்று ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் சிங்கள இனவெறி அரசின் கரங்களுக்குள் சிக்கி உயிரிழந்ததுடன் காயங்களுடன் உடமைகளை இழந்து அகதிகளாக தமிழகத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இவர்களுக்கு உதவும் முகமாக தமிழர் நல மருத்துவ அமைப்பு (Must) தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்புக்கு தமது தொழில் திறனை நல்க பல வைத்திய நிபுணர்கள் தயாராக உள்ளனர். அத்துடன் அனைத்து விடுதலை இயக்கங்களும் இவ்வமைப்புக்கு ஒத்துழைப்பை தந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

**இவ்வமைப்பின் நோக்கங்கள்**

1. தமிழீழ மக்கள் அனைவருக்கும் பொதுவான மருத்துவ அமைப்பாக இருத்தல்.
2. உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழ் வைத்தியர், நிபுணர்களினதும் மற்றும் தமிழர்களுக்கு உதவுவதாய் இருக்கும் ஏனைய வைத்திய நிபுணர்களினதும் சரீரப் பங்களிப்பையும் ஒருங்கு திரட்டி தமிழீழ மக்களின் தேவைக்காக பயன்படுத்தல்.
3. உலகின் பல்வேறு பாகங்களிலும் இருந்து போசாக்கு உணவுகளைத் திரட்டி துன்பப்படும் தமிழீழ மக்களுக்கு வழங்குதல்,
4. உலகின் எல்லாப் பாகங்களிலும் இருந்து உடைகளைத் திரட்டி அவசியப்படும் தமிழீழ மக்களுக்கு விநியோகித்தல்.

இவ்வமைப்பை சிறப்புற செயற்படுத்தவேண்டியது தமிழர்கள் அனைவரதும், உலக சமாதானத்தையும் அமைதியையும் வேண்டி நிற்கும் அனைவரினதும் கடமையாகும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

தமிழர் நல மருத்துவ அமைப்பு
144 சூளைமேடு நெடுஞ்சாலை
சென்னை-94
தென் இந்தியா.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழர் திருநாள்

''இது தமிழர்கள் அனைவரும் கொண்டாடும் திருநாள். நமக்கு உணவளிக்கும் பயிர்விளையக் காரண மான சூரியனுக்கு தமது நன்றியை தெரிவித்து உழவர்கள் தைப்பொங் கல் கொண்டாடுவார்கள். அறுவ வடையின் முதல் நெல்மணிகளை பொங்கி சூரியனுக்கு படைப்பார் கள். தைப்பொங்கலின் அடுத்த தின மான மாட்டுப் பொங்கலன்று தமது பயிர் விளையக் காரணமாயிருந்த மாட்டுக்கு நன்றி.........''

தைப்பொங்கல் தினம் குறித்து ஐந்தாம் வகுப்பு பாடப்புத்தகத்தில் இவ்வாறு படித்த ஞாபகம் அநேக ருக்கு மறந்து போயிருக்காது. இன்று சூரியனுக்கும், கால்நடைகளுக்கும் நன்றி சொல்ல வேண்டிய தேவை தமிழீழ மக்களுக்கு இல்லாமல் போய்விட்டது. தினம் தினம் தமி ழீழமெங்கும் மரண ஓலம் ஓங்கி ஒலிக்கும்போது—சிறையில் சித்திர வதைக்குள்ளாகி துன்புறும் சகோ தரர்களின் கண்ணீரின் மத்தியில்— எந்த உயிரை சுட்டுக் கொல்லலாம், எந்த பெண்ணில் பலாத்காரம் செய்யலாம், எந்த வீட்டுப்பொருளை திருடிச் செல்லலாம், எத்தனை இளை ஞர்களைக் கைது செய்து எப்படிச் சித்திரவதை செய்யலாம் என்றெல் லாம் கறுவிக்கொண்டுதிரியும் ராணு வத்தை கண்டு மனம் பதைக்கும் மக்களுக்கு ஒரு ''திருநாள்''

தைப்பொங்கல்!

இன்று தமிழீழத்தில் நடைமுறைப் படுத்தப்பட்ட அடக்குமுறை சட் டங்கள் யாவற்றையும் மீறிக் கொண்டு சுடர்விடும் தமிழீழ விடு தலைப் போராட்டத்திற்கு அடுத்த ஒரு பலத்த அடிதான் அண்மையில் கொண்டுவரப்பட்ட பாதுகாப்பு வலய சட்டம் இச்சட்டத்தின் பின் யாழ் வீதிகள் வாகனம் இன்றி வெறிச்சோடிக்கிடக்கின்றன நீரி றைக்க எரிபொருள் இன்றி தோட் டங்கள் வரண்டுபோய் கிடக்கின் றன. இராணுவ முற்றுகைக்கு அஞ்சி அஞ்சி மக்கள் குமைந்துகிடக்கிறார் கள்

இந்த அவலநிலையில் வேடிக்கை பார்க்கும் ஒரு கூட்டம் ''இந்தா வருது தமிழீழம்! பொங்கலோடு வருது தமிழீழம்!'' என்று குடுகுடுப் பைக் காரன் பாணியில் தம் அரை வேக்காட்டுத்தனமான அறை கூவலை விடுத்து மக்களை வீணே இழுத்தடிக்கச் செய்யும் மோசடி விளையாட்டுக்கள் ஒருபுறம்.

தைப் பொங்கலின் தாற்பரியம் இப்பொழுது வேண்டி நிற்பது என்ன?

உண்பதற்கு உணவு
பயிரிடுவதற்கு நிலம்
உழைப்பதற்கு உரிமை

இவை நிறைவாய் கிடைக்கும் மகிழ்ச்சிப் பெருக்கில் நடத்தப்படும் திருவிழா!

அதுதான் தமிழீழத்தின் உதயம்! அந்தத் தினமே எமது தைப் பொங்கலாகட்டும்.

## முள்ளியவளையில் இராணுவ அட்டகாசம்

முள்ளியவளையில் 2 பெண்கள் உட்பட 15 பயங்கரவாதிகளை சுட்டுக் கொன்றதாக இலங்கை அரசு வானொலியில் அறிவித்தது. இதன் மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை தடுப்பதில் தான் வெற்றி பெற்று வருவதாக பறைசாற்றி தன்னை தானே [illegible]கப் படுத்தும் அசட்டுத்தனத்தை மீண்டும் செய்திருக்கிறது.

சிறீலங்கா அரசு அப்பாவி பொது சனங்களை கொன்று குவித்து விட்டு அதை மறைக்கச் செய்யும் இவ்வாறான சாக்குப் போக்குகளை உலகம் அறியும். முள்ளியவளையிலும் இவ்வாறான சோகக் காவியம் நிறைவேறியிருக்கிறது. டி. வி. பார்த்துக்கொண்டிருந்த பொதுச் சனங்கள் மீது திடீரென்று வந்த இராணுவத்தினர் சரமாரியாக துப்பாக்கி குண்டுகளை பொழிந்துதள்ளினார்கள். இந்த தாக்குதலி லேயே 15 பேர் கொல்லப்பட்டார்கள். இவர்களில் 15 வயதுக்குட் பட்ட சிறுவர்களும், 50 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களும் அடங் கும். ஆனால் சிறீலங்காவின் பார்வையில் தன் துப்பாக்கி குண்டால் துளைக்கப்படும் ஒவ்வொரு தமிழனும் பயங்கரவாதியே என்ற வழமை யான முத்திரையை குத்திவிட்டு கம்பீரமாக இருக்கிறது.

''பிற்போக்கு வாதிகள் தூக்கும் பாரமான கற்கள் எல்லாம் இறுதி யில் அவர்கள் காலிலேயே விழும்'' என்ற உண்மை ஒருபொழுதும் பொய்யாகாது.

(முதற்பக்கத்தொடர்ச்சி)

னும் உற்சாகமூட்டப்பட்ட சிங்கள அரசு காவல்படையினரின் காவடைத் தனத்தின் மூலம் பல தமிழ் கிராமங் களை சிங்கள கிராமங்களாக மாற்றிச் சென்றார்கள்.

இப்பொழுது இச் சிங்கள மக்க ளுக்கு ஆயுதப் பயிற்சியும், ஆயுதங் களும் வழங்கிக் கொண்டிருக்கிறார் கள.

தமிழீழ விடுதலைப் போராட்டம் சிங்கள இனவாத அரசிற்கு எதிரா னதேயன்றி, சிங்கள மக்களுக்கு எதி ரானதல்ல இந்த கருத்தில் நாம் என்றும் உறுதியாக இருக்கிறோம். ஆனால் அரசு, சிங்கள மக்களை ஆயுதபாணிகளாக்கி தமிழர்கட்கு எதிராக தூண்டிவிடச் செய்கிறது. தமிழீழ விடுதலைப் போராட்டத் திற்கு தார்மீக ஆதரவு வழங்கிக் கொண்டிருக்கும் சிங்களத் தொழி லாள, விவசாய மக்களின் போக்கை தமகககு சாதகமாக மாற்றுவதற்கு சிங்கள அரசு இப்படி திட்டமிட்டு செய்கிறது.

இந்தக் கபட நோக்கம் தெரிந்தி ருந்தும் சில சிங்கள இடதுசாரிக் கட் சிகள் சிங்கள மக்களுக்கு ஆயுதங்கள் விநியோகிக்கப்படுவதை கண்டிக்க வில்லை. சிலர் மறைமுகமாக ஆதரிக் கின்றார்கள். எதுவாயினும் 'சகல அடக்குமுறைகளுக்கும் எதிராக கிளர்ந்தெழுந்து' இலட்சியப்போராட் டம் நடத்தும் நாம் அரசினது இந்த வஞ்சகத் திட்டங்களை வெற்றி கொண்டு முன்னேறுவோம் என்று உறுதி கொள்வோம்.

உங்கள் கையில் தவழும் ஒவ்வொரு இதழும் சிறிலங்கா அரசாங்கத்தினதும் எதிர்புரட்சியாளரினதும் கடுமையான தடைகளை மீறியே வந்து சேருகிறது. ஆகவே ஒவ்வொரு இதழையும் வீணாக்காது எல்லோரும் படிக்க கொடுக்கவும்.

வெளியீடு: செய்தி-தொடர்புத் திணைக்களம் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

Printed by Gratton Litho Ltd (TU), 5b Old Town, SW4 0JT